RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL

சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்



DOI: 10.34256/irjt2523

OPEN ACCESS

# அற இலக்கியங்களில் பேடிகள்

ஆ. மகாலெட்சுமி [அ, *]

[அ] தமிழ்த்துறை, ஸ்ரீ எஸ். இராமசாமி நாயுடு ஞாபகார்த்தக் கல்லூரி, சாத்தூர்-626203, இந்தியா

# Bedi in Moral Literature

A. Mahalakshmi [a, *]

[a] Department of Tamil Sri S.R.N.M College, Sattur-626203, Tamil Nadu, India

* Corresponding Author: mahalakshmiarumugasamy@gmail.com

Received: 29-12-2024
Revised: 12-03-2025
Accepted: 25-03-2025
Published: 03-04-2025

Check for updates

**ABSTRACT**

Of the Eighteen Lesser Texts works of the post-Sangam period, 11 are the books on Dharma. Of these, only three texts, Naladiyar, Thirukkural and Mudumozhikanchi, contain information about Bedi. All three literatures use the term Bedi from the point of view of being incompetent, unbrave and undisciplined. But there are many literary evidences to show that transgenders were great activists and intellectuals from the earliest times. Man is one of the noblest creations of nature. The basis of human life is the distinction between male and female. This is the foundation, source, and source of life. Those who deviate from this basic gender and become homosexual are Bedi. These women have been creating history since the dawn of humanity by presenting themselves as the third gender and facing obstacles. Moral literature has recorded references to such special transgenders.

**Keywords:** Eighteen Lesser Texts, Sangam period, Bedi, Transgenders

## முன்னுரை

சங்கம் மருவிய காலத்தில் தோன்றிய பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் அறநூல்கள் 11 ஆகும். அவற்றுள், நாலடியார், திருக்குறள், முதுமொழிக்காஞ்சி போன்ற மூன்று நூல்களில் மட்டுமே பேடித் தொடர்பான செய்திகள் இடம்பெற்றுள்ளன. இம்மூன்று இலக்கியங்களும் பேடி என்னும் சொல்லாட்சியை திறமையற்றவன், வீரமற்றவன், ஒழுக்கமில்லாதவன் என்னும் நோக்கில் எடுத்துரைக்கிறது. ஆனால், ஆதிகாலத்திலிருந்தே திருநங்கைகள் சிறந்த செயல்வீரர்களாகவும், அறிவில் சிறந்தோராகவும், இருந்தமைக்கு பல்வேறு இலக்கிய சான்றுகள் உள்ளன. அவற்றினை ஆராயும் நோக்கிலே இவ்வாய்வுக் கட்டுரை அமைந்துள்ளது.

இயற்கையின் உன்னதமான படைப்புகளில் ஒன்று மனிதன். இம்மனிதனின் வாழ்வில் அடிப்படையாக திகழ்வது ஆண் - பெண் என்ற பாகுபாடு ஆகும். இதுவே, வாழ்க்கையின் அடித்தளமாகவும், ஆதாரமாகவும், மூலமாகவும் அமைகிறது. இந்த அடிப்படையான பால்நிலையிலிருந்து விலகி பால்திரிபு அடைந்தவர்கள் பேடி ஆவர். இப்பேடிகள் மூன்றாம் பாலினமாய் தன்னை முன்னிறுத்தி தடைகளை எதிர்கொண்டு மனிதஇனம் தோன்றியது முதல் வரலாறு படைத்துக் கொண்டிருக்கின்றனர். அத்தகைய சிறப்பு வாய்ந்த திருநங்கைகள் பற்றிய குறிப்புகளை அற இலக்கியங்கள் பதிவு செய்துள்ளன.

## திருநங்கை

திருநங்கை என்ற சொல்லிற்கு திரு+ நங்கை= திருநங்கை ஆகும். பெண்பாலைக் குறிக்கும் பல சொற்களில் ஒன்று நங்கை ஆகும். இதனுடன் ஆண்பாலினத்திற்கு மட்டும் மரியாதை நிமித்தமாகச் சேர்க்கப்படும் 'திரு' என்ற முன்னொட்டுடன் வருகின்றது. மேலும், திருநங்கை என்பவள் "மங்கையானவள், திருநங்கையானவள், நிழலின் இருளில் சிரிப்பவள். அன்பின் ஊற்றாய் பிறந்தவள். வலியின் வலியை தாங்கியவள். திறமைகளை தீர்க்கமாய் பெற்றவள். ஆணாகி பெண்ணாகி யாதுமானவள்"[1] என்று ஆயிஷாபாரூக் தன்னுடைய வலைப்பூ கட்டுரையில் கூறியுள்ளார்.

## திருநங்கை - வேறுபெயர்கள்

மூன்றாம் பாலினமாய் இருக்கும் திருநங்கைகளை பல்வேறு காலங்களில் மக்களால் பல பெயர்களை கூறி அழைக்கப்பட்டுள்ளனர். அவை,

- பேடி
- அலி
- அரவாணி
- திருநங்கை
- அண்ணகர்
- நிபூசகம்

போன்றவை ஆகும். இவ்வாறு பல பெயர்களால் திருநங்கைகள் அழைக்கப்பட்டிருந்தாலும் தான் ஒரு பெண் என்ற எண்ணம் மன உச்சத்தில் இருப்பதால் திருநங்கை என்றழைப்பது மரியாதை நிமித்தமாகவும், பெருமையாகவும் இருப்பதாக ஒவ்வொரு திருநங்கைகளும் எண்ணுகின்றனர்.

### அற இலக்கியங்களில் பேடிகள்

மனிதன் தோன்றியது முதல் திருநங்கைகளும் தரணியில் வாழ்ந்து வருகின்றனர். ஓர் ஐந்தறிவு உயிரினம் இவ்வுலகில் வாழ்ந்திருந்தாலே அவ்வுயிரினத்தின் தன்மை, இனம், வகை என அனைத்தையும் பதிவு செய்கிறோம். அதுபோல் ஆதிகாலத்தில் மனிதன் வாழ்ந்தவிதத்தையும் பதிவு செய்துள்ளனர். அம்மனித இனத்தில் தோன்றியவர்களான திருநங்கைகள் பண்டைகாலம் முதல் வாழ்ந்ததற்கான அடையாளங்களை பல இலக்கியங்கள் பதிவுசெய்துள்ளன. அவற்றுள் பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் அறநூல்கள் பேடிகள் குறித்த பல கருத்துகள் எடுத்துரைக்கப்பட்டுள்ளன. அவை, நாலடியார், திருக்குறள், முதுமொழிக்காஞ்சி போன்ற அறஇலக்கியங்களிலும் காணலாம்.

### நாலடியார்

சமண முனிவர்களால் இயற்றப்பட்ட நாலடியாரில் 'ஒருவன் தன் மனைவியை விடுத்து பிறர் மனைவியை நாடியவனே அலியாவான்' என்று அலி என்பதற்கு விளக்கம் தரப்பட்டுள்ளது.

செம்மை யொன்றிச் சிறியார் இனத்தாராய்க்

கொம்மை வரிமுலையாள் தோள்மரீஇ உம்மை

பலியால் பிறர்மனைமேல் சென்றாரே இம்மை

அலியாகி ஆடி யுண்டார்"[2] (இல்லறவியல், பிறன்மனை நயவாமை பா.எண் - 15)

முற்பிறப்பில் சிறந்த பண்பு எதுவுமில்லாமல், கீழ்மட்ட குணம் கொண்டாரோடு சேர்ந்து, கோலம் வரைந்த மார்பை உடைய பெண்களைச் சேர முற்பிறவியில் தமக்குரிய செல்வம் முதலிய வலிமை காரணமான மாற்றார் மனைவியிடம் சென்றவர்களே, இப்பிறப்பில் அலியாகப் பிறந்து கூத்தாடி வயிறு பிழைப்பர் என்று பிறன்மனைவியரை நாடியவர்க்குத் தண்டனையாக 'அலிபிறப்பு' அமைந்துள்ளது என்று கூறி பிறன்மனை நயத்தல் கூடாது என்று நாலடியார் நல்லறம் போதிக்கிறது.

"நுண்ணுனர் வின்மை வறுமை அஃதுடைமை

பண்ணப் பணைத்த பெருஞ்செல்வம் - எண்ணுங்கால்

பெண்ணவாய் ஆணிழந்த பேடி அணியானோ

கண்ணவாத் தக்க கலம்"[3] (இன்பவியல்.அறிவின்மை.பா.எண் - 1)

ஒருவனுக்கு நுட்பமான அறிவு இல்லாது இருப்பதே வறுமை. அந்த நுட்பமான அறிவு இருக்குமாயின் அதுவே அவனுக்குப் பெருஞ்செல்வம். ஆராயுமிடத்து, பெண்தன்மையினை விரும்பி ஆண்தன்மையினை இழந்து பேடியானவள். பெண்கள் விரும்பி அணியும் அணிகலன்களை எல்லாம் அணிந்து மகிழ்ந்ததைப் போன்றே, அறிவற்றவர் செல்வம் உடையவராய் இருந்து மகிழ்தலாகும்.

அறிவற்றவனின் செயல்களை பேடியின் செயல்களோடு ஒப்பிட்டு சமண முனிவர்கள் குறிப்பிடுகின்றனர்.

## திருக்குறள்

திருவள்ளுவர் பொருளியலில் உள்ள ஆள்வினையுடைமை, அவை அஞ்சாமை என்னும் இரு அதிகாரத்தில் 'பேடி' என்னும் சொல்லை கையாண்டுள்ளார். மேலும், அவர் 'பேடி' என்னும் சொல்லை இழிவானப் பொருளிலே பயன்படுத்தியுள்ளார்.

"தாளாண்மை இல்லாதான் வேளாண்மை பேடிகை

வாளாண்மை போலக் கெடும்"[4] ((குறள் - 614)

மேற்கண்ட குறட்பாவில் முயற்சி இல்லாதவன் செய்யும் உதவியின் தன்மையானது, படை கண்டால் அஞ்சி நிற்கும் பேடி ஒருவன் கையில் உள்ள வாள் போன்று எப்பயனும் தராது என்று பேடியின் தன்மை சுட்டப்பட்டுள்ளது. முயற்சியின்மைக்கு ஒப்புமையாக பேடியின் செயல் இருப்பதாக வள்ளுவரால் எடுத்துக்காட்டப்படுகின்றது. அதே போன்று அவை அஞ்சாமை அதிகாரத்தில்,

"பகையகத்துப் பேடிகை ஒள்வாள் அவையகத்

தஞ்சு மவள்கற்ற நூல்"[5] (குறள் - 727)

என்ற குறட்பாவில் பெண்ணியல்பு மிக்க பேடி பகைநடுவில் தன் கையில் பிடித்திருக்கும் கூர்வாளைக் கண்டு அஞ்சி நடுங்குதல் போல, அவையில் பேச அச்சப்படுபவன் பயின்ற நூல், கோழை ஒருவனின் கையில் உள்ள கருவி போன்று பயனற்றது என்ற விதத்தில் பேடி என்னும் சொல் எடுத்துரைக்கப்பட்டுள்ளது. அவையில் பேச அஞ்சி நடுங்கும் கோழையின் செயலுக்கும், அச்சத் தன்மையுடைய 'பேடி'யின் செயலுக்கும் வள்ளுவர் தொடர்புபடுத்திக் காட்டும் இடத்தில் பேடி பற்றிய செய்தி இடம்பெற்றுள்ளது.

### முதுமொழிக்காஞ்சி

அறிவுரைக்கோவை என அழைக்கப்படும் முதுமொழிக்காஞ்சியிலும் பேடி எனும் சொல்லாட்சி இடம்பெற்றுள்ளது.

“கழிதருகண்மை பேடியிற் றுவ்வாது”[6] (துவ்வாப்பத்து.பா.எண் - 2)

இடமும், காலமும் அறியாது ஒருவன் மிகுந்த வீரத்தைக் காட்டுவது என்பது பேடித்தன்மைக்கு ஒக்கும் என்று கூறுகிறது.

### முடிவுரை

மனிதன் தன்னுடைய உள்ளுணர்வால் பல பரிமாணங்களை அடைவான். அவற்றுள் பேடித்தன்மை ஆதிகாலத்திலிருந்தே இருந்து வந்துள்ளது. பல்வேறு இலக்கண நூல்களும், இலக்கியங்களிலும் பேடி குறித்த செய்திகளை பதிவிட்டுள்ளன. அவற்றில் அற இலக்கியங்களில் “பேடி” என்னும் சொல்லானது அறிவற்றிவனுக்கும், பிறன்மனை நாடுபவனுக்கும், வீரமில்லாதவனுக்கும் ஒப்பிட்டுக் கூறுகிறது. ஆனால், முன்னொரு காலத்தில் பேடிகள் வீரத்தில் சிறந்தவர்களாகவும், சிறந்த சான்றோராகவும் திகழ்ந்தமைக்குச் சான்றுகள் உள்ளன என்பதை அறிய முடிகிறது

## References


ஆயிஷா பாரூக் கட்டுரை, வலைப்பூ

நாலடியார் - இல்லறவியல் - பிறன்மனை நயவாமை - பா.எண் - 15

நாலடியார் - இன்பவியல் - அறிவின்மை - பா.எண்.01

திருக்குறள் - குறள் எண் - 614

திருக்குறள் - குறள் எண் - 727

முதுமொழிக்காஞ்சி - துவ்வாப்பத்து - பா.எண் - 2



**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.



**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2025. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License